சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.171/2022

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ம் நாள் வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | வயது | 45 |
| த/பெ | சென்னு | வட்டம் | கோயமுத்தூர் தெற்கு |
| விலாசம் | நேதாஜி நகர், நஞ்சுண்டாபுரம், கோயமுத்தூர் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | புஞ்சை புளியம்பட்டி சார்பதிவாளர் அலுவலக உதவியாளர் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி குறுக்கு விசாரணை :**

என்னுடைய முதல் விசாரணையில் வா.சா.ஆ.1 02.02.2022 அன்று பதிவு செய்யப்பட்டதாக கூறி உள்ளேன் என்றால் அது தட்டச்சுத் தவறு ஆகும். வா.சா.ஆ.1 03.02.2022. அன்று பதிவு செய்யப்பட்டது. ஒரு ஆவணத்தை பதிவு செய்யும் போது அந்த ஆவணத்தின் முந்தைய ஆவணங்களை பார்வையிட்டு ஆய்வு செய்வோம் என்றால் சரி தான். வா.சா.ஆ.1 லும் வா.சா.ஆ. 9 லும் பட்டா எண்.2459 ன் நகல் இணைக்கப்பட்டு உள்ளது என்றால் சரி தான். அந்த பட்டாவில் சுப்பைய கவுண்டர் என்ற பெயர் உள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 தாக்கல் செய்தவரின் பெயர் சுப்பைய கவுடர் என உள்ளது என்றால் சரி தான். வா,சா,ஆ,1ல் பட்டா எண். 1731 இணைக்கப்பட்டு உள்ளது எ ன்றால் சரி தான். அந்த பட்டாவில் உரிமையாளர்கள் பெயராக கனகராஜ், சுப்பம்மாள் மற்றும் முருகேசன் ஆகியோரின் பெயர்கள் உள்ளன என்றால் சரி தான். அந்த பட்டாவில் கண்டுள்ள நிலங்களை பொறுத்து தான் வா.சா.ஆ.1 எழுதப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ல் கனகராஜ் மற்றும் முருகேசன் ஆகியோர்கள் தரப்பினர்களாக இல்லை

என்றால் சரி தான். நில உரிமையாளர்கள் இல்லாமல் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ,1 ஆவணம் செல்லத் தக்கது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உரிமையாளர்களை ஏன் சேர்க்கவில்லை என நாங்களும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ன் 4 வது பக்கத்தில் *"1951 ஆம் ஆண்டின் 2146 எண்ணாக பதிவான பாக சாசன பத்திரப் படி ஏ பாக சொத்துக்களாக பாத்தியப்பட்டு"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த ஆவணத்தில் கண்ட சொத்தைப் பொறுத்து தான் வா.சா.ஆ.1 எழுதப்பட்டுள்ளது என்றால் சரி தான். 1951 ஆம் ஆண்டின் அந்த ஆவணம் வா.சா.ஆ.1 உடன் இணைக்கப்படவில்லை என்றால் அந்த ஆவணத்தின் முதல் பக்கம் இனணக்கப்பட்டுள்ளது. ஆவண எண்.2146/1951 ல் மொத்த விஸ்தீர்ணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. ஒரு ஆவணத்தை பதிவு செய்யும் போது அந்த சொத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்று கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அடிப்படையான விஷயம் என்றும் சுப்பைய கவுடர் எங்களுக்கு வேண்டியவர் என்பதால் அதனை நாங்கள் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி அல்ல. சுப்பைய கவுடரின் குடும்பத்திற்கு மொத்தமே 28 ஏக்கர் 60 சென்ட் மட்டுமே பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மொத்தம் 33 ஏக்கர் 10 சென்ட் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் படித்துப் பார்த்து தான் சொல்ல முடியும். வா.சா.ஆ.1 உண்மையான உரிமையாளர்களை சேர்க்காமல் எழுதப்பட்டதாலும், தவறான விஸ்தீர்ணத்தை எழுதி கொடுத்ததாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. சுப்பைய கவுடர் அந்த ஊரில் முக்கியமான நபர் என்பதால் வா.சா.ஆ.1 ஐ முறையாக சரி பார்க்காமல் பதிவு செய்துள்ளோம் என்றால் சரி அல்ல. அதனால் தான் ஆவணத்தை பதிவு செய்த தேதி உள்ளிட்ட விபரங்களை தவறுதலாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. வா.சா.ஆ.1 செல்ல தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியுடன் மறு விசாரணை**

பட்டா எண்.2459 ல் கரியப்ப கவுண்டர் மகன் சுப்பைய கவுண்டர் என்றும் வா.சா.ஆ.1 ல் கரியப்ப கவுடர் மகன் சுப்பைய கவுடர் என உள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 பாக சாசன ஆவண மட்டுமே அது விற்பனை ஆவணம் அல்ல என்றால் சரி தான். பொதுவாக பாக சாசன ஆவணங்களை பதிவு செய்யும் போது பிரித்துக் கொள்ள சம்மதமா என தரப்பினர்களிடம் கேட்போம் என்றால் சரி தான்.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

பாக ஆவணத்தை பதிவு செய்யும் போது யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என கேட்ட பின்னர் தான் பதிவு செய்வது வழக்கம் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஐ பதிவு செய்யும் போது அந்த நடைமுறையை பின்பற்ற வில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஐ பதிவு செய்யும் போது தரப்பினர்களிடம் சம்மதமா என கேட்காமல் பதிவு செய்துள்ளோம் என்றால் சரி அல்ல. அந்த நடைமுறையை கடைபிடித்திருந்தால் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் என்பது தெரிய வந்திருக்கும் என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G. Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.